## இந்தியாவிலேயே முதல்முறையாக மகளிர் காவலர் பிரிவு:

# உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் - பெயர் மாற்றி விளம்பரம் தேடுது 'ரீல்ஸ்' ஆட்சி!

**1. அடிக்கல் நாட்டியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 1973!**

இந்தியாவில் முதன்முறையாக மகளிர் காவல் படையை உருவாக்கிய பெருமை தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையே சாரும். 1973ஆம் ஆண்டு திமுக ஆட்சியில், ஒரு சப்இன்ஸ்பெக்டர், ஒரு தலைமைக் காவலர், 20 காவலர்கள் என 22 பெண்களைக் கொண்ட முதல் மகளிர் காவல் அணி உருவாக்கப்பட்டது. அந்த அணி 1974 நவம்பர் 1ம் தேதி ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் முறைப்படி பணியில் அமர்த்தப்பட்டது.

**2. 22ல் இருந்து 27,000 ஆக 50 ஆண்டு வளர்ச்சி!**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் போட்ட அந்த 22 பேர் கொண்ட விதை, இன்று 27,000 பெண் காவலர்களைக் கொண்ட ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது. 2025 ஜனவரி 1 நிலவரப்படி தமிழ்நாடு காவல்துறையில் 26,589 பெண் காவலர்கள் பல்வேறு பதவிகளில் பணியாற்றுகிறார்கள்.

**3. முதலமைச்சர் ஸ்டாலின் காலம்: 'பிங்க் பேட்ரோல்' புரட்சி 2025**

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வழியில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2025 நவம்பர் 11ம் தேதி, ரூ.12 கோடி செலவில் 80 'பிங்க் பேட்ரோல்' வாகனங்களை பெண்கள் பாதுகாப்பிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். மதுரை, கோவை, திருச்சி உள்ளிட்ட நகரங்களில் பெண் காவலர்களே ஓட்டும் இந்த பிங்க் நிற வாகனங்கள் 24 மணி நேரமும் ரோந்து செல்கின்றன.

**4. இன்று: காவல் நிலையங்களை ஆளும் சிங்கப்பெண்கள்**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் தொடங்கி வைத்த அந்த புரட்சியின் விளைவு இன்று தமிழ்நாட்டில் 43% சட்டம்ஒழுங்கு காவல் நிலையங்களுக்கு பெண் காவல் நிலைய அதிகாரிகள் தலைமை தாங்குகிறார்கள். 222 மகளிர் காவல் நிலையங்கள் செயல்படுகின்றன.

**5. விஜய் ஆட்சியின் 'சிங்கப்பெண்' பாவலா 2026**

இப்போது விஜய் ஆட்சியில் 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை' என்று பெயர் வைத்து, ரூ.354 கோடி நிதி ஒதுக்கீட்டில், ஐ.ஜி. பவனீஸ்வரி தலைமையில் 30+ பேர் கொண்ட படையை 2026 ஜூன் 9ல் களம் இறக்கியுள்ளார்கள்.

ஆனால் வேதனை என்னவென்றால்: விஜய் ஆட்சியில் களமிறக்கப்பட்டுள்ள 'சிங்கப்பெண்' படையைப் பார்த்தால், ஏதோ இவர் ஆட்சியில்தான் முதன்முறையாக பெண்கள் காவல்துறையில் சேர்ந்தது போலவும், இவர்தான் புதிதாக மகளிர் காவல் படையை உருவாக்குவது போலவும் ஒரு பாவலா வைக் காட்டுகிறார்கள்.

உண்மை என்னவென்றால்: 1973லேயே இந்தியாவிற்கே முன்னோடியாக முதன்முதலில் மகளிர் காவல் படையை உருவாக்கி, பெண்களை காக்கி சீருடையில் களமிறக்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்தான். 22 பெண்களோடு அவர் தொடங்கிய பயணம், ஸ்டாலினின் பிங்க் பேட்ரோல் வாகனங்கள் வழியாக, இன்று 27,000 சிங்கப்பெண்களாக உருவெடுத்து காவல் நிலையங்களையே ஆளும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் போட்ட விதைக்கு, இன்று பெயர் மாற்றி விளம்பரம் தேடுகிறார்கள். வரலாறு தெரியாதவர்களுக்கு வேண்டுமானால் இது புதிதாகத் தெரியலாம். ஆனால் தமிழ்நாட்டுக்குத் தெரியும் முதல் சிங்கப்பெண்களை உருவாக்கியது முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்று.



**சைதை சாதிக்**
தி.மு.க. செய்தித் தொடர்பாளர்



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், சைமன் காலனி ஊராட்சி, குறும்பனை ஊரைச் சார்ந்த கழக மூத்த முன்னோடி ஜான் கில்டன் அவர்கள் உடல் நலக்குறைவால் மறைந்த நிலையில் சைமன் காலனி ஊராட்சி தி.மு.க. சார்பில் நிதி உதவியை மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் அன்னாரது குடும்பத்தினரிடம் வழங்கி ஆறுதலையும் தெரிவித்தார். உடன் குருந்தன்கோடு கிழக்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.பி.சந்திரா, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ஜோஸ்லின் பிரபு, குறும்பனை கிளை செயலாளர் சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## சைமன் காலனி ஊராட்சி தி.மு.க. சார்பில்

# கழக முன்னோடி ஜான் கில்டன் குடும்பத்தினருக்கு நிதி உதவி!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் வழங்கினார்!

கன்னியாகுமரி, ஜூன் 12-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், சைமன் காலனி ஊராட்சி, குறும்பனை ஊரை சார்ந்த கழக மூத்த முன்னோடி ஜான் கில்டன் அவர்கள் உடல் நலக்குறைவால் மறைந்த நிலையில் அவரது குடும்பத்தினருக்கு 11.06.2026, வியாழக்கிழமை அன்று சைமன் காலனி ஊராட்சி தி.மு.க. சார்பில் நிதி உதவியை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் குடும்பத்தினரிடம் வழங்கி ஆறுதலையும் தெரிவித்தார்.

உடன் குருந்தன்கோடு கிழக்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.பி.சந்திரா, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ஜோஸ்லின் பிரபு, குறும்பனை கிளை செயலாளர் சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## 'திராவிட மாடல்' ஆட்சியில் கொண்டு வந்த

# மக்கள் நலத் திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும்!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேட்டி!

கள்ளக்குறிச்சி,ஜூன் 12-

திராவிட மாடல் நல்லாட்சியில் கொண்டு வந்த மக்கள் நல திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும் என மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கூறினார்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில் உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஆர். வசந்தவேல் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் பத்மஜாவை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

அதனையடுத்து வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ செய்தியாளர்களிடம் கூறுகையில், புதிதாக பொறுப்பேற்றுள்ள கள்ளக்குறிச்சி புதிய மாவட்ட ஆட்சியர் பத்மஜாவை, நானும் வசந்தவேல் எம்எல்ஏ மற்றும் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய குழு தலைவர்கள், நகராட்சி தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உள்ளிட்டவர்களுடன் நேரில் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்தோம்.

இந்த மாவட்டம் புதிதாக அறிவிக்கப்பட்ட மாவட்டம். கடந்த 5 ஆண்டு காலம் திராவிட மாடல் நல்லாட்சியில் மக்களுக்கான பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தோம், அந்த திட்டங்கள் நடைபெற்று வருகின்றன, அந்தந்த திட்டங்களை விரைந்து முடிக்க வலியுறுத்தியுள்ளோம். அதுமட்டும் இல்லாமல் இந்த மாவட்டத்திற்கு ஏற்கனவே கொண்டு வந்துள்ள நிலுவையில் உள்ள கள்ளக்குறிச்சி புற வழிச் சாலை, உளுந்தூர்பேட்டை வெளிவட்ட சாலை உள்ளிட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்.

மேலும் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக உள்ளாட்சி பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய அனைவரும் மொத்தமாக குரல் கொடுத்துள்ளோம். மாவட்டத்தின் வளர்ச்சிக்கான தேவைகளை எடுத்துரைத்துள்ளோம், மேலும் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக நாங்கள் ஒட்டுமொத்தமாக நிர்வாகத்துக்கு ஆதரவு தருகிறோம் என மாவட்ட ஆட்சியர் பத்மஜாவிடம் எடுத்துரைத்துள்ளோம் என்றார்.



தொடர்ந்து பேசுகையில் பாலிமர் நியூஸ், நியூஸ் தமிழ் 24 சேனல், தமிழ் ஜனனம் ஆகிய முன்னணி தொலைக்காட்சி செய்தி சேனல்களை அரசு கேபிளில் இருந்து நீக்கப்பட்டதற்கு கள்ளக்குறிச்சி மாவட்ட திமுக சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கொண்டார்.

இதில் கள்ளக்குறிச்சி மாவட்ட சேர்மன் புவனேஸ்வரி பெருமாள், நகர சேர்மன் சுப்புராயலு, ஒன்றிய சேர்மன்கள் அலமேலு ஆறுமுகம், சத்தியமூர்த்தி, தாமோதரன், ராஜவேல், வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், அஞ்சலாட்சி அரசகுமார், சாந்தி இளங்கோ, திலகவதி நாகராஜன், பேரூராட்சி சேர்மன்கள் ரேவதி ஜெய்கணேஷ், வீராசாமி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், அண்ணாதுரை உள்ளிட்டோர் உடன் கலந்து கொண்டனர்.

## கழக விவசாயத் தொழிலாளரணி துணைத் தலைவர்

# விராலிமலை த.சந்திரசேகரன் தாயார் த.பிச்சையம்மாள் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

புதுக்கோட்டை, ஜூன் 12 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதி விராலிமலையைச் சேர்ந்த கழக விவசாயத் தொழிலாளரணி துணைத் தலைவரும், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவருமான த.சந்திரசேகரனின் தாயார் த.பிச்சையம்மாள் அவர்கள் நேற்று முன்தினம் (10.06.2026புதன்) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, தாயாரை இழந்துவாடும் த.சந்திரசேகரன் மற்றும் அவர்தம் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

## திராவிடம் வெல்லும் – வரலாறு அதைச் சொல்லும்!

# மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. வல்லமை பெறட்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 12 –

தி.மு.க.வின் தகைசான்ற தலைவருக்கும், கொள்கை வீரர்களுக்கும் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திராவிடத்தை உயிர் மூச்சாகக் கொண்ட திராவிட அரசியல் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் பவள விழா (75 ஆண்டு) கண்ட ஓர் இணையற்ற இயக்கம்.

1916 இல் தொடங்கப் பெற்றது 110 ஆண்டுகளுக்கு முன்னே, சர் பிட்டி தியாகராயர், டாக்டர் நாயர், டாக்டர் நடேசனார் போன்ற திராவிடர் தலைவர்களால் பார்ப்பனரல்லாதார் இயக்கம். (The NonBrahmin Movement) தந்தை பெரியார் அவர்கள், 1926 இல் காங்கிரசில் பார்ப்பன ஆதிக்கம், சமூகநீதிக்கு எதிரான நிலைப்பாடு காரணமாக வெளியேறி, சுயமரியாதை இயக்கம் என்று ஜாதி ஒழிப்பு, தீண்டாமை அழிப்பு, பெண்ணடிமை நீங்கிய சமத்துவம், சமதர்ம மூட நம்பிக்கைகளுக்கு எதிரான புதியதோர் பகுத்தறிவுச் சிந்தனைப் பண்ணையாக உருவாக்கினார்.

பழைய நீதிக்கட்சி அரசியலில் சந்தித்த தேர்தல் தோல்வி காரணமாகவும், பதவி அரசியல் உள்ளடிகளாலும், 1937 இல் படுதோல்வி அடைந்த நிலையில், காங்கிரஸ் பார்ப்பனர்கள் நீதிக்கட்சி என்ற திராவிடர் இயக்கத்தை 500 அடி ஆழத்தில் குழிதோண்டி புதைத்துவிட்டோம் என்று ஆர்ப்பரித்தனர்.

**நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம்!**

1944 இல் நீதிக்கட்சியும், சுயமரியாதை இயக்கமும் இணைந்து, பண்பாடு, கல்வி மற்றும் சமூகப் புரட்சி கொள்கைகள், சுயமரியாதை இயக்கக் கொள்கை, கோட்பாடுகளை உள்ளடக்கி, சேலத்தில் 1944 இல் திராவிடர் கழக பெயர் மாற்றம் செய்யப்பட்ட மாநாட்டில், 'அண்ணாதுரை தீர்மானம்' என்றே தந்தை பெரியார் பெயரிட்டு ஒரு புத்தெழுச்சி புதுமுறுக்குடன் சமூக இயக்கம் கண்டார்.

1949 இல் அதன் அரசியல் பிரிவாகி, திராவிடர் கழக இணையான இரட்டைக் குழலாக திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி, பத்தாண்டுகள் – எதிர்க்கட்சியாகப் பணியாற்றி, 1967 இல் அறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சியும் அமைத்தது. ஒரு புதிய அரசியலை, திராவிடர் உரிமைகளை அடிக்கட்டுமானத்தை எழுப்பிய நீதிக்கட்சி, தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்க கொள்கைகள், திட்டங்களை – தனது அரசியல் இலக்கு ஆக்கிக் கொண்டு, முறையே அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோருக்குப் பின், தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில், 'திராவிட மாடல்' ஆட்சியாக 5 ஆண்டில், 50 ஆண்டுக்கான சாதனை, சமூக மாற்ற வளர்ச்சி என்ற முந்தைய தலைவர்களின் மாண்பை இணைத்து மேலும் வலுவான கொள்கைச் சாதனைகளைச் செய்த சரித்திரம் இன்றும் மாற்றி எழுதப்பட முடியாத வரலாற்றுப் பெட்டகமாகும்.



தேர்தல் வெற்றி, தோல்வி என்பது அவ்வப்போது வாக்காளர்களின் மனநிலையைப் பொறுத்து ஏற்படும் தீர்ப்பே தவிர, ஆழ்ந்து அடுத்த தலைமுறைப்பற்றிச் சிந்தித்து, அறிவிக்கும் முடிவாக இருப்பதில்லை.

**93 ஆண்டுகளில், 83 ஆண்டு அனுபவம்!**

93 ஆண்டுகாலத்தில் 83 ஆண்டு அனுபவத்தில், முதல் தேர்தல் முதல் கடைசியாக நடந்த தேர்தல்வரை பார்த்து, வெற்றி– தோல்வி சரித்திரம் கண்ட ஒரு ஒரு பொது வாழ்க்கைத் தொண்டன் – தந்தை பெரியாரின் மாணவன் – என்றும் தாய்க் கழகம், தன் குஞ்சுகளைத் தூக்கும் பருந்தை எதிர்க்கும் தாய்க் கோழி போன்று களத்தில் நின்று, சில பல நிலைகளை, உரிமையோடும், கொள்கை உறவு நிலையோடும், மலை குலைந்தாலும், மனங்குலையா மாவீரன் தளபதி சகோதரர் மு.க.ஸ்டாலின் அக்கட்சியின் உடன் பிறப்புகளுக்கு நினைவூட்ட வேண்டிய கடமையைச் செய்வது இவ்வறிக்கையின் நோக்கம். ஊன்றி படித்து உணரவேண்டுகிறோம்.

1969 இல், முதலமைச்சர் அண்ணா மறைந்தவுடன், ஆரியம் கொக்கரித்தது.

"இனி தி.மு.க. கலைந்த சீட்டுக் கட்டு – சரிந்த மணல் வீடு – பதவிச் சண்டையால் அக்கழகம் ஒழிந்துவிடும்" என்று நினைத்தது.

தந்தை பெரியார் ஒரு மாதம் சென்னையில் தங்கி, அறிக்கை மற்றும் தக்கவர்கள் மூலம் முந்தைய நீதிக்கட்சி நிலைபற்றி முன் உதாரணங்களை எல்லாம் கூறி, கலைஞரை வற்புறுத்தி முதலமைச்சர் பொறுப்பை ஏற்கச் செய்தார். அப்போது அவர் தந்த அறிவு (அனுபவ) உரை இரண்டு.

**தி.மு.க.வுக்கு தந்தை பெரியார் வலியுறுத்திய அந்தக் "கட்டுப்பாடு!"**

1. "தி.மு.க. என்பது ஒரு கெட்டியான பூட்டு; அதை எவராலும் அவ்வளவு எளிதில் அழித்துவிடவோ, உடைத்துவிடவோ முடியாது. ஆனால், அந்தப் பூட்டிற்குள் யாராவது கள்ளச்சாவி போட்டுத் திறந்துவிடக் கூடாது. அதில் தான் தோழர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்!"

2. "அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்ற மூன்று பண்புகளில், மற்ற இரண்டை விடவும் மிகமிக முக்கியமானது 'கட்டுப்பாடு' தான்! கடமையும், கண்ணியமும் பலவிதமான சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறக்கூடிய தன்மை கொண்டவை. ஆனால், கட்டுப்பாடு என்பது எவருக்கும், எப்போதும், எந்தச் சூழலிலும் மாறாமல் பொருந்த வேண்டிய ஒன்றாகும். இதை ஒருபோதும் மறவாதீர்" என்றார்.

இன்று அதன் தேவை – முன்பைவிட தேர்தலில் தோற்ற ஒரு சூழலில் அதிமுக்கியம் வாய்ந்த ஒன்றாகும். தி.மு.க.வினர் அனைவரும் தலைமைக்கு, ராணுவக் கட்டுப்பாட்டுடன் அதை நிரூபிக்க வேண்டிய முக்கிய தருணம் இது!

இயக்கத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள், இயக்கத்தின் அடிக்கட்டுமானம் முதல் மேல்தளம் வரை பழுது பார்த்து, வலிவும், பொலிவும் உள்ளதாக ஆக்க இயற்கை அதற்கு வழங்கிய நல் வாய்ப்பு! நல்ல சமயம் இது!

இதனை நழுவிடக் கூடாது என்று 'கப்'பென்று பற்றிக்கொண்டு, மளமளவென தேவையான மாற்றங்களை இயக்க அமைப்பிலும், கொள்கைத் திட்ட செயல் முறையிலும் செய்ய தலைமைக்கு முழு அதிகாரம் தர, தொண்டர்கள், தோழர்கள், இயக்கக் காவலர்கள் எழுச்சியோடு ஏந்திப் பிடிக்கவேண்டிய தருணம்.

இளைய தலைமுறை பொறுப்பேற்க வேண்டும் என்ற குரலுக்கு முக்கியத்து வம் தரப்படும் என்றே கருதுகிறோம்.

தி.மு.க.வின் இளைய தலைமுறையினரை முன்பு எப்போதும் இல்லாத எழுச்சியோடு வழிநடத்த மானமிகு உதயநிதி ஸ்டாலின் இயக்கத்திற்குத் தக்க நேரத்தில் கிடைத்த ஒரு கொள்கை நிதி!

அவரது ஆற்றல், ஆளுமை, பிரச்சார முறை, இயக்கத்தவர்களிடம் காட்டும் அன்பும், பண்பும் கலந்த மரியாதை, கொள்கை லட்சியத்தில் சிறந்தோங்கி, பின்வாங்காது, சமரசமில்லா சண்டமாருதமாய் தலைவர் தளபதிக்குக் கிடைத்த ஒரு பெரும் அசையும் சொத்து.

அதனால்தான் ஆரியம், அரசியல் எதிரிகள் அவரையே குறி வைத்துள்ளனர்!

அதுபோல, கொள்கையாளர்கள், இளையர்கள், ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து நல்ல அனுபவமும், ஆற்றலும் உள்ள, கலைஞரால் கண்டெடுக்கப்பட்ட பலர், இளமை கருத்து, கொள்கை வளமையோடு இருப்பவர்கள் அடையாளம் காணப்படவேண்டும். சிறுபான்மைச் சமுதாயம் பல தலைமுறைகளாக 'திராவிட இயக்கத்தினையே தங்கள் பாடிவீடாகப் பார்த்துப் பரவச உறவு கொள்ளும், குறிப்பாக இஸ்லாமிய சமூகத்தவர்களுக்குரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும். மகளிர் அணியை கொள்கை முத்திரை யோடு வார்த்தெடுக்க கவிஞர் கனிமொழி போன்றவர்களையும், புதிய ஆற்றல் பொதிந்துள்ளவர்களையும் இணைத்து, கம்பீரமாக செயல்பட வைப்பது காலத்தின் கட்டாயம். ஓர் எழுச்சிப் பாசறையாக உள்ள இவர்களைப் போன்றவர்கள் சில உதாரணம்.

இயக்க மூத்தவர்கள் – மாவட்ட இயக்கத்தைப் பல ஆண்டுகள் நெருக்கடி காலம் தொடங்கி, இன்று வரை கட்டி வந்த அனைவரையும்கூட அரவணைத்து, கலைஞர் அவர்கள் அடிக்கடி கூறும் 'தென்னை மரத்து மட்டைகள்' உவமையை மனதிற் கொண்டு செயல்பட்டால், புத்தொளி, புத்துணர்ச்சிக்கு, புது முறுக்கு – ஓர் இராணுவக் கோட்டம்போல், களம் காண ஆயத்தமாகலாம்.

தோல்வி – வெற்றி என்பது தேர்தல் சக்கரத்தில் சுழன்று வருபவை.

கொள்கை சறுக்கலற்ற தொண்டறத் தோழர்களே, இதன்மூல பலம். அவர்களே இரத்த நாளங்கள், நாடி நரம்புகள் என்பதால், அவர்களது கருத்துக்கு என்றும் மதிப்பளிப்பவர், அவர்களது அருமை உணர்ந்தவர் தலைவர் மு.க.ஸ்டாலின் என்பது கல்லின்மேல் எழுத்து! அவர்தம் சாதனைகளும், உழைப்பும் வரலாறு மறக்க முடியாதவை!

அவரது ஒப்பிலா உழைப்பை எத்தனை சோதனைகள் வந்தாலும், பறிக்க முடியாது.

விழுவது முக்கியமல்ல, எவ்வளவுக்கெவ்வளவு எழுவது என்பதே முக்கியம்.

எழுக, தி.மு.க. வல்லமை பெறட்டும்!

திராவிடம் வெல்லும்; வரலாறு என்றும் அதைச் சொல்லும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிவிப்பு!

ஈரோடு, ஜூன் 12-


கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது அறிவுறுத்தலின்படி பி.எம்.ஸ்ரீ, சி.பி.எஸ்.இ. 9ஆம் வகுப்பு மும்மொழிக் கொள்கை திணிப்பை எதிர்த்து மற்றும் வி.பி. எஸ்.ஏ மசோதாவை திரும்பப் பெறக் கோரி ஒன்றிய அரசை கண்டித்து வருகின்ற 23ம் தேதி தி.மு.க மாணவர் அணி சார்பாக நடைபெறுகின்ற ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளை முன்னிட்டு வருகின்ற ஜூன் 17ஆம் தேதி மாலை 4 மணி அளவில் அறிவாலயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா தலைமையில், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலையில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை சாம்பசிவம்

**ஜூன் 12 (2016)**



**வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பணியை உதறிவிட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1957–ல் பேறிஞர் அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர்.**

**கே.வி.குப்பம் ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**வேலூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் – கீ.வ.குப்பம் ஒன்றிய பெருந்தலைவராகவும் – முருக்கம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்தெடுக்கப்பட்ட அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா கைதியாகவும், அதற்கு முன்னர்1962–ல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி, அறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தபோது, அண்ணாவால் "தாடிக்காரர்"என அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**